வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 14.3.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஸ்வாநிதி திட்டத்தின் கீழ் இன்று புதுடெல்லியில், சாலையோர வியாபாரிகள் 1 லட்சம் பேருக்கு, கடன் உதவிகளை வழங்கினார்.

நாடு முழுவதும், முதல் முறை வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள இளம் வாக்காளர்கள், என் முதல் ஓட்டு-நாட்டிற்காக என்றே பேசி வருவதாக, பிரதமர் கூறி உள்ளார்.

ஒரே நாடு-ஒரே தேர்தல் குறித்து ஆராய்ந்த உயர் நிலைக் குழு, இன்று புதுடெல்லியில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவிடம், அறிக்கை கொடுத்துள்ளது.

புதுச்சேரியில், காரைக்கால் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு பிஆர்என் திருமுருகன், மாநில அமைச்சராக இன்று பதவி ஏற்றுள்ளார்.

மோடி-ஸ்வாநிதி

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லி ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில், சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் ஸ்வாநிதி திட்டப் பயனாளிகள் 1 லட்சம் பேருக்கு கடன் உதவிகளை வழங்கினார். டெல்லியைச் சேர்ந்த 5 ஆயிரம் நடைபாதை வியாபாரிகளும் இதில் அடங்குவர்.

4-ஆம் கட்ட டெல்லி மெட்ரோ கட்டுமானப் பணிகளின் ஒரு பகுதியாக, இந்திரலோக்-இந்திர பிரஸ்தா ரயில் நிலையங்களுக்கு இடையிலும், லஜ்பத்நகர்-சாகேத் ரயில் நிலையங்களுக்கு இடையிலும், 2 புதிய மெட்ரோ ரயில் பாதைகளை, மொத்தம் 8 ஆயிரத்து 400 கோடி ரூபாய் செலவில் அமைக்கும் பணிகளுக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

மோடி-முதல்முறை ஓட்டு

நாடு முழுவதும், முதல் முறை வாக்களிக்க தகுதி பெற்றுள்ள இளம் வாக்காளர்கள் வாக்களிப்பதில் காட்டும் அபார உற்சாகம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி காணொளி ஒன்றை பகிர்ந்து கொண்டுள்ளார். நாட்டின் குறுக்கிலும், நெடுக்கிலும் இளைஞர்கள், என் முதல் ஓட்டு-நாட்டிற்காக என்றே பேசி வருவதாக, எக்ஸ் சமூக ஊடகப் பதிவில் பிரதமர் கூறி உள்ளார்.

இளைஞர் ஓட்டு

முதல் முறையாக வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள இளைஞர்கள் அனைவரும், வரவிருக்கும் மக்களவை தேர்தலில் வாக்களிப்பதை உறுதிப்படுத்தும் வகையில், நாட்டிற்காக என் முதல் ஓட்டு என்னும் பிரச்சார இயக்கத்தை தேர்தல் ஆணையம் நடத்தி வருகிறது. இது தொடர்பாக புதுச்சேரியில் இளம் வாக்காளர்களை நாம் சந்தித்து கருத்துக்களை சேகரித்தோம். கல்லூரி மாணவி சோனியா காந்தி நம்மிடம் பேசுகையில்......

(வாய்ஸ்-சோனியாகாந்தி)

அனைவரும் நேர்மையாக வாக்களிக்க வேண்டிய அவசியம் குறித்து கல்லூரி மாணவி புவனா கூறுகையில் ........

(வாய்ஸ்-புவனா)

ஒரே□தேர்தல்

ஒரே நாடு-ஒரே தேர்தல் குறித்து ஆராய, முன்னாள் குடியரசு தலைவர் திரு ராம் நாத் கோவிந்த் தலைமையில், மத்திய அரசால் அமைக்கப்பட்ட உயர் நிலைக் குழுவினர் இன்று புதுடெல்லியில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு-வை சந்தித்து, அறிக்கை சமர்ப்பித்தனர். 18 ஆயிரத்து 626 பக்கங்கள் அடங்கிய இந்த அறிக்கை, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, சட்டத்துறை அமைச்சர் திரு

அர்ஜுன்ராம் மேக்வால், 15-ஆவது நிதிக் கமிஷனின் முன்னாள் தலைவர் திரு என் கே சிங், ஆகியோர் முன்னிலையில் குடியரசு தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

அனைத்து விதமான ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களையும் ஆராய்ந்து, உயர் நிலைக் குழுவினர் தயாரித்துள்ள இந்த அறிக்கையில், எல்லாத் தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்த, 2 கட்ட அணுகுமுறை பரிந்துரைக்கப் பட்டுள்ளதாக மத்திய சட்டத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. முதல் கட்டத்தில், மக்களவைக்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடைபெறும் என்றும், அதற்கடுத்த 100 நாட்களுக்குள், நகராட்சிகள் மற்றும் கிராம பஞ்சாயத்துக்களுகான தேர்தல் நடைபெறும் விதத்தில், 2-ஆம் கட்டம் ஒருங்கிணைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றம், சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான எல்லா தேர்தல்களுக்கும் ஒரே வாக்காளர் பட்டியல் மற்றும் புகைப்பட வாக்காளர் அடையாள அட்டைகளை பயன்படுத்தவும், உயர் நிலைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

ஒரே நாடு-ஒரே தேர்தல் குறித்து 47 அரசியல் கட்சிகள் தங்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை உயர்நிலைக் குழுவிடம் வழங்கி

இருந்தன. இதில் 32 அரசியல் கட்சிகள் எல்லாத் தேர்தல்களையும் ஒரே சமயத்தில் நடத்த ஆதரவு வெளியிட்டன. இதுஅல்லாது நாடு முழுவதிலும் இருந்து பொது மக்கள் 21 ஆயிரம் பேர் வழங்கிய ஆலோசனைகளிலும், ஒரே நாடு-ஒரே தேர்தலுக்கு, 80 சதவிகித ஆதரவு காணப்பட்டது. சிஐஐ, ஃபிக்கி, அசோச்சேம் உள்ளிட்ட தொழில்- வர்த்தக நிறுவனங்கள் மற்றும் புகழ்பெற்ற பொருளாதார வல்லுனர்களும், ஒரே நாடு-ஒரே தேர்தலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

*நிர்மலா*

வடகிழக்கு மாநிலங்களுக்கு நீண்டகாலம் முன்பாகவே கிடைத்திருக்க வேண்டிய கவனத்தை கடந்த 10 ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி தான் வழங்கி இருப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறி உள்ளார். இன்று குவஹாத்தி ஐஐடி உயர்கல்வி நிறுவனத்தில், விக்சித் பாரத் தூதர்களுக்கான கல்வி வளாக மாநாட்டில் அவர் பேசுகையில் நாட்டின் வளர்ச்சிக்கான உந்து சக்தியாக வடகிழக்கு மாநிலங்களை பிரதமர் கருதுவதாக தெரிவித்தார். மத்திய அரசின் எல்லாத் திட்டங்களாலும் வடகிழக்கு பிராந்தியம் பயன்பெறுவதை பிரதமர் உறுதிப்படுத்தி வருவதாகவும் நிதி அமைச்சர் தெரிவித்தார். மத்திய அமைச்சர்கள், கடந்த 10 ஆண்டுகளில் மொத்தம் 850 முறை, வடகிழக்கு மாநிலங்களுக்கு பயணம் மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

*திருமுருகன்*

புதுச்சேரியில், காரைக்கால் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு பிஆர்என் திருமுருகன், மாநில அமைச்சராக இன்று பதவி ஏற்றுக் கொண்டார். ராஜ்நிவாசில் இன்று முற்பகல் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில் துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், திரு திருமுருகனுக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு உறுதி மொழியும் செய்து வைத்தார். முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மாநில அமைச்சர்கள், சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வ கணபதி, தலைமைச் செயலர் திரு சரத் சவுகான், காவல்துறை தலைமை இயக்குநர் திரு ஸ்ரீனிவாஸ் மற்றும் அரசுச் செயலர்கள் உட்பட பலர் பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்டனர். அமைச்சராக பதவி ஏற்று திரு பிஆர்என் திருமுருகனுக்கு துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் உட்பட பலரும் வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.

*பயிற்சி*

முதலுதவி சிகிச்சை, மற்றும் மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக அளிக்க வேண்டிய சிபிஆர் புத்துயிர் உதவி குறித்து, காவல் துறையினர், ஊர்க்காவல் படையினர், என்சிசி-என்எஸ்எஸ் மாணவர்கள் உட்பட 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான, அறுபடை வீடு மருத்துவக்

கல்லூரியின் பயிற்சி திட்டத்தை, துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் ஜிப்மர் சமூக நலக் கூடத்தில் இன்று தொடக்கி வைத்தார். தெலங்கானா முழுவதும் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களுக்கு சிபிஆர் விழிப்புணர்வு ஏற்படுத்த தெலங்கானா ராஜ்பவன் ஏற்கனவே சிபிஆர் சேலஞ்ச் திட்டத்தை செயல்படுத்தி வருவதும் குறிப்பிடத் தக்கது.

**நியமனக் கடிதம்**

புதுச்சேரி அரசின் போக்குவரத்து துறையில் அமலாக்க உதவியாளர் பணியிடங்களுக்கு, போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 பேருக்கு ஏற்கனவே நியமன ஆணை வழங்கப்பட்ட நிலையில், காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருந்த 7 பேருக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று, நியமனக் கடிதங்களை வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அறையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, போக்குவரத்து ஆணையர் திரு சிவக்குமார் மற்றும் இதர அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**கால்நடை**

மத்திய அரசின் கால்நடை நோய்க் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் புதுச்சேரியில் 16 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ள, 3 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளை , முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று கொடி அசைத்து தொடக்க வைத்தார். சட்டப் பேரவை வளாகத்தில்

நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சட்டப் பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர்கள் திரு ஜெயக்குமார். திரு திருமுருகன், அரசுக் கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திருமதி லதா மங்கேஸ்வர் உள்ளிட்டடோர். கலந்து கொண்டனர். இம்மூன்று வாகனங்களில் 2 வாகனங்கள், புதுச்சேரி பிராந்தியத்திலும், ஒரு வாகனம் காரைக்கால் பகுதியிலும் அனைத்து கிராமங்களுக்கும் சென்று கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் என்றும் இதற்கு தேவையான எல்லா வசதிகளும் இதில் இடம் பெற்றுள்ளதாகவும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேரி கட்டிடம்

புதுச்சேரியில் பழமை மாறாமல் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ள, நகராட்சி அலுவலகத்திற்கான மேரி கட்டிடத்தை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று திறந்து வைத்தார். சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் உள்ளிட்ட அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சித் துறை இயக்குநர் திரு சக்திவேல். புதுச்சேரி நகராட்சி ஆணையர் திரு கந்தசாமி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் குடிநீர் கள ஆய்வுகளுக்கான

பரிசோதனைக் கருவிகள், முதல் கட்டமாக அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டன.

***ரங்கசாமி-இரங்கல்***

பத்மஶ்ரீ விருது பெற்ற, புதுச்சேரியை சேர்ந்த சமூக சேவகி மதலீன் ஹெர்மான் தெ-பிளிக் அம்மையார் மறைவு குறித்து முதலமைச்சர் திரு ரங்கசாமி இரங்கல் தெரிவித்துள்ளார். ஒலந்திரியா தொண்டு நிறுவனத்தை நிறுவி, தெருவோரச் சிறுவர்கள், முதியோர், தொழுநோயாளிகளுக்கு, சமூக பாதுகாப்பு வழங்கி வந்தவர் ஹெர்மான் தெ-பிளிக் அம்மையார் என்றும், பிரஞ்ச் அரசின் செவாலியே விருது பெற்ற அன்னாரின் தன்னலமற்ற சேவைகள், மக்கள் மனங்களில் எப்போதும் நிலைத்திருக்கும் என்றும், முதலமைச்சர் தமது இரங்கல் செய்தியில் கூறி உள்ளார்.

***பணவீக்கம்***

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையிலான பணவீக்கம் கடந்த பிப்ரவரியில், 4 மாதங்களின் மிக குறைந்த அளவாக, 0.2 சதவிகிதமாக குறைந்துள்ளது. இது இவ்வாண்டு ஜனவரியில், 0.27 சதவிகிதமாக இருந்தது. ஆயினும் உணவுப் பணவீக்கம் 6.95 சதவிகிதமாக, சற்றே அதிகரித்து இருப்பதாக, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களில் தெரிய வந்துள்ளது.

*ஜிதேந்தி□சிங்*

உள்நாடு மற்றும் உலக அளவிலான அறிவியல் முன்னேற்றத்தில் கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா ஆற்றி உள்ள பங்கு பாராட்டத் தக்கது என்று, மத்திய அறிவியல்-தொழில் நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறி உள்ளார். சுயசார்பு இந்தியாவிற்கான அறிவியல்-தொழில்நுட்பச் சூழல் என்பது பற்றிய அறிக்கை ஒன்றை, இன்று புதுடெல்லியில் வெளியிட்டுப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். சந்திரயான், ஆதித்யா போன்ற திட்டங்களின் வெற்றி மூலம் இந்தியா விண்வெளித் துறையில் தனது வெற்றிகளை நிரூபித்து இருப்பதாகவும், ககன்யான் திட்டத்தினால் இத்துறையில் இந்தியாவின் கவுரவம் இன்றும் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். பொது சுகாதாரத் துறையில், குறிப்பாக தடுப்பூசி தயாரிப்பில் உலக அளவில் இந்தியா முன்னிலை வகிப்பதை அமைச்சர் சுட்டிக் காட்டினார். புதுமையாக்கத்திற்கு அரசு அளித்து வரும் முக்கியத் துவம் காரணமாகவே, இந்தியாவில், ஸ்டார்ட்-அப் மற்றும் யூனிகார்ன் நிறுவனங்கள் அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

*பூட்டான்*

பூட்டான் பிரதமர் திரு ஷெரிங் டோப்கே, 5 நாள் இந்தியப் பயணமாக இன்று புதுடெல்லி வந்துள்ளார். மத்திய அமைச்சர் திரு அஸ்வினி குமார் சவுபே டெல்லி விமான நிலையத்தில் அவரை வரவேற்றார். கடந்த ஜனவரி

மாதம் பூட்டான் பிரதமராக பதவி ஏற்ற பின்னர் திரு டோப்கே மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு பயணம் இதுவாகும். இப்பயணத்தின் போது, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை, அவர் சந்திப்பார் என்றும், பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்துவார் என்றும், வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியாவிற்கும், பூட்டானுக்கும் இடையே, பரஸ்பர புரிதல் மற்றும் நம்பிக்கை அடிப்படையிலான நல்லுறவு நிலவுவதும், இவ்வுறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளை ஆராயும் வாய்ப்பாக, பூட்டான் பிரதமரின் பயணம் அமைவதும் குறிப்பிடத் தக்கது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஸ்வாநிதி திட்டத்தின் கீழ் இன்று புதுடெல்லியில், சாலையோர வியாபாரிகள் 1 லட்சம் பேருக்கு, கடன் உதவிகளை வழங்கினார்.

நாடு முழுவதும், முதல் முறை வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள இளம் வாக்காளர்கள், என் முதல் ஓட்டு-நாட்டிற்காக என்றே பேசி வருவதாக, பிரதமர் கூறி உள்ளார்.

ஒரே நாடு-ஒரே தேர்தல் குறித்து ஆராய்ந்த உயர் நிலைக் குழு, இன்று புதுடெல்லியில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவிடம், அறிக்கை கொடுத்துள்ளது.

புதுச்சேரியில், காரைக்கால் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு பிஆர்என் திருமுருகன், மாநில அமைச்சராக இன்று பதவி ஏற்றுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/14.3.2024/Script.

---------------------